

பிரம்மாண்ட கட்டுமான நிறுவன சாதனை விருதை வி.ஜி.என். நிறுவன சேர்மன் வி.என்.தேவதாசுக்கு, செயற்கை கோள் விஞ்ஞானியும், சந்திராயன் திட்ட நிபுணருமான மயில்சாமி அண்ணாதுரை வழங்கினார்.

## குறித்த நேரத்தில் வீடு டெலிவரி, பசுமை சூழல், அரசு விதிகளுக்கேற்ப கட்டும் நிறுவனம்

# சென்னையில் நடுத்தர, பிரீமியம், சொகுசு ரக 3500 அடுக்குமாடி வீடுகள் கட்டுவதில் வி.ஜி.என். கட்டுமான நிறுவனம் தீவிரம்

## சேர்மன் வி.என்.தேவதாஸ், நிர்வாக இயக்குனர் ஏ.பிரதீஷ் தேவதாஸ் தகவல்

சென்னை, ஜூன் 3–

வி.ஜி.என். கட்டுமான நிறுவனம் தற்போது அம்பத்தூர், திருவேற்காடு, கிண்டி, நுங்கம்பாக்கம், இ.சி.ஆர். (கிழக்கு கடற்கரை சாலை), போரூர் பகுதிகளில் நடுத்தர வருவாய், பிரிமீயம், சொகுசு ரகமாக 3500 அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டி வருகிறது. வெளிநாட்டு இந்தியர்கள் வி.ஜி.என். திட்ட வீடுகளில் நம்பிக்கையுடன் முதலீடு செய்கிறார்கள் என்றும் இதன் சேர்மன் வி.என். தேவதாஸ் தெரிவித்தார்.

நம்பிக்கை, நாணயம், குறித்த நேரத்தில் வீடு டெலிவரி, சொகுசு வசதிகள், பசுமை சூழல், மாசு கட்டப்பாடு முறைகள், கட்டுமானத்தில் உச்சபட்ச பாதுகாப்பு என வி.ஜி.என். சிறப்பாக செயல்பட்டு பல்வேறு சாதனை விருதுகளை பெற்றுள்ளது. கட்டுமான தொழில் விருது இந்த துறையின் தலைச்சிறந்த நீதிபதிகளால் தேர்வு செய்யப்பட்டு வழங்கப்படுவதால் இது கூடுதல் கவுரவமாகும் என்று இதன் சேர்மன் வி.என்.தேவதாஸ் தெரிவித்தார்.

சென்னையில் நடுத்தர வருவாய் பிரிவினர், பிரிமீயம் சொகுசு ரக 3500 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி வரும் வி.ஜி.என். புராபர்டி டெவலப்பர்ஸ் நிறுவனத்துக்கு மெகா வீட்டு வசதி குடியிருப்பு திட்டங்கள் நிறைவேற்றும் சாதனை நிறுவன விருது கிடைத்துள்ளது. இந்த விருதை வி.ஜி.என். நிறுவன சேர்மன் வி.என்.தேவதாசுக்கு, செயற்கை கோள் விஞ்ஞானியும், சந்திராயன் திட்ட நிபுணருமான மயில்சாமி அண்ணாதுரை வழங்கினார்.

சென்னை மாநகரின் மிகப்பெரிய ரியல் எஸ்டேட் கட்டுமான நிறுவனமான விஜிஎன் ப்ராபர்ட்டி டெவலப்பர்ஸ், இத்துறையில் 75 ஆண்டுகளாக இயங்கிவருகிறது.

நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஏ. பிரதீஷ் தேவதாஸ் இந்த விருது குறித்து பேசுகையில், மிக எளிமையானதாக தோன்றினாலும்கூட, இதை உருவாக்குவதற்கு பல்வேறு அடுக்குகளில் ஆழ்ந்த சிந்தனை, வடிவமைப்பு மற்றும் இறுதியாக செயலாக்கம் என பல வழிமுறைகளை கடந்து வி.ஜி.என். வந்திருக்கிறது. இன்னும் பல 10 ஆண்டுகளுக்கு இன்னும் உயர்வான பல முன்னேற்றங்களை எட்டுவதற்கு இந்நிறுவனம் வளர்ச்சியடைவதை நிச்சயம் காணும்'' என்று கூறினார்.

''இன்றைக்கு விஜிஎன் ப்ராபர்ட்டி டெவலப்பர்ஸ் இந்த மதிப்பீடுகளுக்காக திறம்பட இயங்கி வருகிறது. விஜிஎன் எப்போதும் வழங்கி வந்திருக்கிற தரம், பாதுகாப்பு மற்றும் நம்பிக்கை என்ற முதன்மை அம்சங்களை நேர்த்தியாக பிரதிபலிக்கிறது,'' என்று விஜிஎன் குழுமத்தின் தலைவர் வி.என். தேவதாஸ் கூறினார்.

1942ஆம் ஆண்டில் வேதப்புடி குருசாமி நாயுடு, என்ற லட்சிய புருஷரால் வி.ஜி.என். குரூப் நிறுவப்பட்டது. பல வழிகளில் தொலைநோக்குப்பார்வையை கொண்டிருந்த அவரின் கனவை விஜிஎன் நிறுவனம் நிஜமாக்கியதோடு மட்டுமன்றி ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் கனவுகளையும், யதார்த்தத்தில் உண்மையாக்கிருக்கிறது.

ரியல் எஸ்டேட் துறை மீது விஜிஎன் கொண்டிருக்கின்ற பொறுப்புறுதியை மற்றும் சிறப்பு கவனத்தையும் இந்த விருது கவுரவம் உணர்த்துகிறது என்றார் வி.என்.தேவதாஸ்.

## மறைந்த பாடகர், சினிமா இசையமைப்பாளர்

# சிதம்பரம் ஜெயராமன் நூற்றாண்டு: மகள் சிவகாமசுந்தரி எழுதிய நூல்

## சிவசங்கரி வெளியிட சீர்காழி சிவசிதம்பரம் பெற்றார்

சென்னை, ஜூன் 3–

பிரபல திரைப்பட இசையமைப்பாளரும், பாடகருமான சிதம்பரம் சி.எஸ். ஜெயராமனின் 100வது ஆண்டு பிறந்தநாளை நினைவுகூர்ந்து கொண்டாடும் வகையில் அவரது மகள் சிவகாம சுந்தரி தொகுத்தளித்த ஒரு புத்தகத்தை பிரபல திரைப்பட இயக்குநர் எஸ் பி முத்துராமன் மற்றும் புகழ்பெற்ற எழுத்தாளர் சிவசங்கரி ஆகியோர் வெளியிட பத்மஸ்ரீ டாக்டர். சீர்காழி ஜி. சிவசிதம்பரம் கவின்கேர் தலைவர், நிர்வாக இயக்குநர் சி கே ரங்கநாதன், ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

'ஓர் அரிய இசைப்பயணம்' என்ற இப்புத்தகமானது சி எஸ் ஜெயராமனின் சங்கீத வாழ்வில் நிகழ்ந்த ஆர்வமூட்டும் சிறு நிகழ்ச்சி குறிப்புகளின் தொகுப்பாகும். அவரது புதல்வியால் எழுதப்பட்டுள்ள இப்புத்தகமானது, தமிழ் இசை உலகத்தைச் சேர்ந்த பல பிரபலங்கள் மற்றும் இசை விற்பன்னர்களால் எழுதப்பட்ட கடிதங்கள் மற்றும் வாழ்த்துக்களின் தொகுப்பையும் உள்ளடக்கியதாக வெளிவந்திருக்கிறது.

இப்புத்தக வெளியீடு குறித்து கருத்து தெரிவித்த இப்புத்தக ஆசிரியரான சிவகாம சுந்தரி, எனது தந்தையாரின் 100வது ஆண்டு பிறந்த நாள் கொண்டாட்டத்தின்போது இப்புத்தகத்தை வெளியிடுவது அளவில்லா மகிழ்ச்சியையும், திருப்தியையும் எனக்கு தருகிறது. பன்முகத்திறன்கொண்ட கலைஞரான எனது தந்தையாரின் பெயர், தமிழ் திரையுலகின் பொற்காலம் என்று கருதப்பட்ட காலகட்டத்தில் இசையோடு இணைந்த ஒன்றாக இணைத்து பேசப்பட்டது. இசைத் துறையைச் சேர்ந்த பல விற்பன்னர்களால் எழுதப்பட்ட கடிதங்களும் மற்றும் எனது தந்தையாரின் இசைப்பயணத்தில் நிகழ்ந்த சுவாரஸ்யமான நிகழ்வுகளின் தொகுப்புகள் இசை ஆர்வலர்களை கடந்த காலத்திற்கு இட்டுச் செல்லும் என்பது நிச்சயம். எனது தந்தையாரின் இசை பங்களிப்பு குறித்து இத்துறையைச் சேர்ந்த பல பிரபலங்களால் எழுதப்பட்ட கடிதங்களை சேகரித்து தொகுத்ததும் மற்றும் இப்புத்தகத்தை எழுதி வெளியிடுவதும் மனதிற்கு நிறைவளிப்பதாகவும், உத்வேகம் தருவதாகவும் இருந்தது. இப்புத்தகத்தின் வழியாக, தமிழ் திரையுலகின் பொற்காலத்தை குறித்து அறிந்துகொள்ளவும் மற்றும் நினைத்து அசைபோடவும் பல வாசகர்களுக்கு உதவும் என்று நான் நம்புகிறேன்," என்று கூறினார்.



இந்த நிகழ்ச்சியில் சி எஸ் ஜெயராமனின் வாழ்க்கையில் நிகழ்ந்த பல நிகழ்வுகள் மற்றும் அவர் தொடர்பான விஷயங்களை சுவையோடு பகிர்ந்துகொண்ட நிகழ்ச்சி தொகுப்பாளர் அப்துல் ஹமீத் இம்மாலை நிகழ்ச்சியில் பொழுதுபோக்கு நிகழ்வாக 'ஜீவராஜ சுருதி' இசைக்குழு வழங்கிய திரை இசைப்பாடல்களின் இசை நிகழ்ச்சி அமைந்தது. இசை விற்ப்பன்னரான திரு சிதம்பரம் எஸ் ஜெயராமன் குரலைப்போலவே பாடுவதில் புகழ்பெற்ற மலேசியாவைச் சேர்ந்த எம் எஸ் பிரிட்டோ இந்த இசை நிகழ்ச்சியில் ஜெயராமனின் பாடல்களைப் பாடி பார்வையாளர்களை மகிழ்வித்தார்.






## 10 மாதங்களில் கட்டி முடிக்கப்பட்ட

# புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி: 9–ந் தேதி எடப்பாடி திறந்து வைக்கிறார்

## இந்த ஆண்டில் 150 மருத்துவ மாணவர்கள் சேர்ப்பு

## அமைச்சர் விஜயபாஸ்கர் நேரில் ஆய்வு செய்து தகவல்

**சென்னை, ஜூன்.3–**

**பத்தே மாதங்களில் கட்டி முடிக்கப்பட்ட புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரியை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி 9–ந் தேதி (வெள்ளிக்கிழமை) அன்று திறந்து வைக்கிறார்.**

10 கோடி ரூபாய் செலவில் 13 மருத்துவமனைகளில் கட்டணமில்லா கருத்தரிப்பு சிகிச்சை மையங்கள் விரைவில் துவக்கப்படும் என மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

அம்மாவின் அரசு, மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு உறுதி பூண்டுள்ளது. இதனடிப்படையில் அம்மா புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து இந்திய மருத்துவ குழுமத்தின் விதிகளுக்கு உட்பட்டு பத்தே மாதங்களில் புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரிக்கான கட்டிடங்கள் வரலாற்று சாதனையாக கட்டி முடிக்கப்பட்டு இந்த ஆண்டு முதல் 150 மாணவர் சேர்க்கைக்கு தயார் நிலையில் உள்ளது.

இம்மருத்துவக் கல்லூரியினை திறப்பதற்கான ஆயத்த பணிகள் குறித்து அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் தலைமையில் புதுக்கோட்டையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பின் பேசிய அமைச்சர்,

புரட்சித் தலைவி அம்மா ஆணைக்கிணங்க புதுக்கோட்டையில் பத்தே மாதங்களில் கட்டி முடிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி வரும் 9–ந் தேதி அன்று முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமியால் திறந்து வைக்கப்படவுள்ளது என தெரிவித்தார்.



**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், 9–ந் தேதி முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியினால் திறந்து வைக்கப்படவுள்ள புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையினை ஆய்வு செய்தார். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பி.கே. வைரமுத்து, மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் ஜெ. ராதாகிருஷ்ணன், கலெக்டர் கணேஷ், மருத்துவ கல்லூரி முதல்வர் சாரதா மற்றும் அலுவலர்கள் உடன் உள்ளனர்.**

மேலும் அமைச்சர் கூறும் பொழுது, தமிழ்நாட்டில் கருத்தரிப்பு சிகிச்சைக்காக இதுவரை தனியார் மருத்துவமனைகளையே அதிக பொருட்செலவில் மக்கள் நாடி வந்தனர். ஏழை எளிய மக்களின் நலனைகருத்தில்கொண்டு அம்மாவின் அரசு தமிழ்நாட்டில் விரைவில் 10 கோடி ரூபாய் செலவில் 13 அரசு மருத்துவமனைகளில் கட்டணமில்லா கருத்தரிப்பு சிகிச்சை மையங்களை அமைக்கவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைவர் பி.கே. வைரமுத்து, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் ஜெ. ராதாகிருஷ்ணன், புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் கணேஷ், புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் சாரதா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


